# சென்மதி நிலுவை

## பொதுவான போக்குகள்

*1993* இல் இலங்கையின் சென்மதி நிலுவையில் (செநி) காணப்பட்ட குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் வெளிநாட்டுச் சொத்துக்களின் உறுதியான திரட்சிக்கு வழிவகுத்த மொத்த நிலுவை சிஎஉ *3,750* இலட்சங்கொண்ட முன்னெப்பொழுதுமடையப்படாத உயர்ந்த மிகையை அடைந்தமையேயாகும். சென்மதி நிலுவையின் இவ்வுறுதிப்பாடு நடைமுறை, மூலதனக்கணக்குகள் ஆகிய இரண்டினதும் முன்னேற்றங்களில் பிரதிபலிக்கப்பட்டது. வர்த்தகக் கணக்கில் மோசமான நிலைமை காணப்பட்டபோதிலும் பணிகள் கணக்கிலும் தனியார் மாற்றல்களிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைத் தொடர்ந்து *1993* இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை சிஎஉ *290* இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தது. தனியார்துறைக்கான மூலதனப் பாய்ச்சல்களின் முக்கிய காரணமாக மூலதனக் கணக்கின் தேறிய உட்பாய்ச்சல்கள் சிஎஉ *2,280* இலட்சத்தால் அதிகரித்தன. இவ்வதிகரிப்புக்களுக்கு நடைமுறைக்கணக்குக் கொடுக்கல் வாங்கல்கள் மேலும் தாராளமயமாக்கப்பட்டமையும், தனியார்துறை மூலமான வளர்ச்சிக்கு நாடு கொண்டுள்ள கடப்பாட்டில் தனியார்துறையின் நம்பிக்கையை அதிகரிக்கச்செய்த நாட்டின் உறுதிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் இருந்தமையுமே பெருமளவு காரணங்களாகும்.

செழிப்பான ஏற்றுமதிகள்துறை *1993* இல் *17* சதவீதத்திற்கு மேலாக வளர்ச்சியடைந்தது. இதேவேளையில் மூலதன, இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான அதிகரித்த செலவுகளின் பெருமளவு காரணமாக இறக்குமதிகளின் மீதான செலவினம் ஏறத்தாழ *16* சதவீதத்தினால் விரிவடைந்தது. இதன் விளைவாக வர்த்தகப்பற்றாக்குறை *1992* இன் சிஎஉ *7,400* இலட்சத்திலிருந்து *1993* இல் சிஎஉ *8,250* இலட்சத்திற்கு விரிவடைந்தது. மாறாக தற்காலிக மதிப்பீடுகளின்படி, பணிகள் கணக்கு *1981* இற்குப்பின் முதல் முறையாக மிகையொன்றைப் பதிவு செய்தது. சிஎஉ *310* இலட்சங்கொண்ட (ரூ. *20,430* இலட்சம்) இம்மிகையானது. *1992* இல் பதிவுசெய்யப்பட்ட சிஎஉ *230* இலட்சங்கொண்ட (ரூ. *14,300* இலட்சம்) பற்றாக்குறையைவிட குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றமாகும். இதே வேளையில் இரு ஆண்டுகளுக்குமிடையில் தனியார் மாற்றல்களிலிருந்தான தேறிய வரவுகளும் சிஎஉ *3,280* இலட்சத்திலிருந்து (ரூ. *202,530* இலட்சம்) சிஎஉ *4,020* இலட்சத்திற்கு (ரூ. *270,900* இலட்சம்) வளர்ச்சியடைந்ததைத் தற்காலிக மதிப்பீடுகள் காட்டுகின்றன. எனினும் அலுவல்சார் மாற்றல்கள் முன்னைய ஆண்டின் சிஎஉ *1,300* இலட்சத்துடனொப்பிடின் சிஎஉ *1,150* இலட்சமாக மதிப்பிடப்பட்டு தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. இதன்படி, நடைமுறைக் கணக்குக்குறை *1992* இன் சிஎஉ *3,060* இலட்சத்திலிருந்து (ரூ. *189,350* இலட்சம்) *1993* இல் சிஎஉ *2,770* இலட்சமாக (ரூ. *186,040* இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. இரு ஆண்டுகளுக்குமிடையில் மொஉஉ இன் சதவீதமாக நடைமுறைக்கணக்குக்குறையும் *4.5* சதவீதத்திலிருந்து *3.8* சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

# சென்மதி நிலுவை

காலாண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி .

அண்மைய ஆண்டுகளில் பட்டியலிடப்பட்ட முதலீடு, நேரடி முதலீடு ஆகிய இரண்டினதும் மூலதனப் பாய்ச்சல்கள் அரசிற்கான சலுகையினடிப்படையிலமைந்த உதவியிலிருந்து தனியார் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களுக்கு குறிப்பிடத்தக்களவில் தொடர்ச்சியாக மாற்றமடைந்துவரும் தன்மையினை மூலதனக் கணக்கின் அசைவுகள் எடுத்துக்காட்டின. 1992 இல் காணப்பட்டதுபோன்று, அரசுக்கான உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்பட்டதைவிடக் குறைவாக இருந்தமைக்கு செயற்றிட்ட உதவியைக் குறைவாகப் பயன்படுத்தியமையும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான (ஆஅவ) வேளாண்மை நிகழ்ச்சித் திட்டக்கடனின் இரண்டாவது தொகுதி பிற்போடப்பட்டமையுமே முக்கியமான காரணங்களாகும். எனினும் பட்டியலிடப்பட்ட முதலீட்டின் அதிகரித்த உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டு நேரடி முதலீட்டுடனும் அதனுடன் இணைந்த கடன் முதலீட்டுடனும் சேர்ந்து அரசினால் சலுகை உதவி குறைவாகப் பயன்படுத்தபட்டமையை மிகக்கூடுதலாக எதிரீடு செய்து மூலதனக் கணக்கினைக் குறிப்பிடத்தக்களவில் வலுப்படுத்துவதற்கு வழிவகுத்தன. முன்னைய ஆண்டின் சிஎஉ 1,330 இலட்சங்கொண்ட மொத்த மிகையுடனொப்பிடுகையில் செ. நி. இல் ஏற்பட்ட சிஎஉ 3,750 இலட்சம் அளவிலான மொத்த மிகையே இதன் இறுதிப் பெறுபேறாகும். இதன் விளைவாக நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1992 இறுதியில் காணப்பட்ட சிஎஉ 10,470 இலட்சத்திலிருந்து (ரூ. 662,360 இலட்சம்) 1993 இறுதியில் சிஎஉ 15,430 இலட்சத்திற்கு (ரூ. 1,052,390 இலட்சம்) அதிகரித்தன. இது 1994 ஆம் ஆண்டின் திட்டமிடப்பட்ட இறக்குமதிகளை 5.6 மாதங்களுக்கு நிதியிடப் போதுமானதாகும். 1992 இறுதியில் இது தொடர்பான தொகை 4.4 மாதங்களுக்கான இறக்குமதிகளை நிதியிடப் போதியதாயிருந்தது.

இச்சென்மதி நிலுவை அபிவிருத்திகள் வர்த்தக, கொடுப்பனவு முறை தொடர்ந்தும் தாராளமயமாக்கப்பட்டமையின் விளைவாகவே ஏற்பட்டன என்பது வலியுறுத்திக் கூறப்பட வேண்டும். ஏற்றுமதி வருவாய்களைத் தாயகத்திற்குத் திருப்பி அனுப்பல், ஒப்படைத்தல் தேவைப்பாடு ஆகியவற்றை நீக்கியதன் வாயிலாக தாராளமயமாக்கல் வழிமுறைகளின் முக்கிய நடவடிக்கை ஒன்று மாச்சு மாதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டவேளையில் பணிக்கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டன. ஆண்டின் எஞ்சியபகுதியில் நடைமுறைக் கணக்குக் கொடுக்கல்வாங்கல்கள் மீது எஞ்சியிருந்த செலாவணிக்கட்டுப்பாட்டுத் தடைகள் நீக்கப்பட்டமையின் விளைவாக 1993 இன் இறுதியில் போக்குவரத்து, கல்வி, வைத்தியச் செலவுகள் போன்ற எந்த வர்த்தக அல்லது பணிக்கொடுப்பனவுகள் மீதும் எவ்வித செலாவணிக்கட்டுப்பாட்டுத் தடைகளும் இருக்கவில்லை. மேலும் இறக்குமதித்தீர்வைகள் குறைக்கப்பட்டதுடன் இறக்குமதி உரிமம் பெறவேண்டிய விடயங்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டு பாதுகாப்பு, உடல்நலம் அல்லது சுற்றாடல் போன்ற முக்கிய காரணங்களுக்காகக் குறிப்பிட்ட சில விடயங்கள் இறக்குமதி உரிம முறையின் கீழ் தொடர்ந்தும் இருந்தன. அதேவேளையில் இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மீதான தீர்வை மற்றும் வரிமுறைகளை இலகுபடுத்தி ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்குடன் அம்முறை திருத்தியமைக்கப்பட்டவேளையில் வெளிநாட்டு முதலீட்டிற்கான ஊக்குவிப்புகளின் அமைப்பும் அதனை இலகுபடுத்தி தெளிவுபடுத்துவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டது.

*அட்டவணை 1.49*

## சென்மதி நிலுவை - பகுப்பாய்வு வெளிப்படுத்துகை 1989 - 1993

| | சி.எ.உ. பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1989 | 1990 | 1991 | 1992 (அ) | 1993 (ஆ) | 1989 | 1990 | 1991 | 1992 (அ) | 1993 (ஆ) |
| 1. வணிகப் பொருட்கள் | -530 | -518 | -726 | -740 | -825 | -24,050 | -28,145 | -41,252 | -45,785 | -55,486 |
| ஏற்றுமதிகள் ... | 1,207 | 1,456 | 1,491 | 1,745 | 2,046 | 56,175 | 79,481 | 84,379 | 107,855 | 138,174 |
| இறக்குமதிகள் ... | 1,737 | 1,974 | 2,217 | 2,485 | 2,871 | 80,225 | 107,626 | 125,631 | 153,640 | 193,660 |
| 2. பணிகள் ... | -123 | -72 | -65 | -23 | 31 | -5,609 | -3,905 | -3,773 | -1,430 | 2,043 |
| பெறுகைகள் ... | 315 | 391 | 440 | 489 | 535 | 14,597 | 21,364 | 24,897 | 30,256 | 36,050 |
| கொடுப்பனவுகள் ... | 438 | 463 | 505 | 612 | 504 | 20,207 | 25,269 | 28,670 | 31,686 | 34,007 |
| 3. பொருட்களும் பணிகளும் (1 + 2) ... | -653 | -590 | -791 | -763 | -794 | -29,659 | -32,050 | -45,025 | 47,215 | -53,443 |
| 4. மாற்றல்கள் (தேறிய) ... | 405 | 398 | 441 | 451 | 517 | 18,591 | 21,660 | 25,030 | 28,280 | 34,839 |
| தனியார் (தேறிய) ... | 258 | 268 | 293 | 328 | 402 | 11,840 | 14,518 | 16,623 | 20,253 | 27,090 |
| அலுவலர் சார் (தேறிய) ... | 147 | 130 | 148 | 130 | 115 | 6,751 | 7,142 | 8,407 | 8,027 | 7,749 |
| 5. நடைமுறைக்கணக்கு நிலுவை (4 + 4) ... | -248 | -192 | -350 | -306 | -277 | -11,068 | -10,390 | -19,995 | -18,935 | -18,604 |
| 6. நாணயமல்லா மூலதனம் (தேறிய) ... | 216 | 345 | 475 | 331 | 609 | 10,566 | 18,931 | 27,171 | 23,450 | 40,917 |
| நேரடி முதலீடு ... | 14 | 24 | 46 | 86 | 134 | 633 | 1,294 | 2,633 | 5,315 | 9,107 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு ... | - | 7 | 24 | 18 | 48 | - | 390 | 1,329 | 1,122 | 3.272 |
| தனியார் நீண்ட காலம் (தேறிய) ... | 39 | -33 | -18 | 18 | 132 (இ) | -1,803 | -1,835 | -1,005 | 1,162 | 8,849 (இ) |
| தனியார் குறுகிய காலம் (தேறிய) ... | 72 | 48 | 35 | 91 | 105 | 3,557 | 2,685 | 2,105 | 5,652 | 7,110 |
| அரசு நீண்ட காலம் (தேறிய) ... | 169 | 299 | 366 | 189 | 190 | 8,179 | 16,397 | 20,849 | 11,494 | 12,579 |
| உட்பாய்ச்சல் ... | 291 | 392 | 463 | 313 | 334 | 13,811 | 21,497 | 26,378 | 19,193 | 22,316 |
| வெளிப்பாய்ச்சல் ... | 122 | 93 | 97 | 124 | 144 | 5,632 | 5,100 | 5,529 | 7,699 | 9,738 |
| அரசு குறுகிய காலம் ... | - | - | 23 | -22 | - | - | - | 1,260 | -1,295 | - |
| 7. பெறுமதி சீராக்கங்கள் ... | - | - | - | - | - | 108 | 751 | 235 | 1,555 | -1,420 |
| 8. சிஎஉ ஒதுக்கீடுகள் ... | - | - | - | - | - | - | - | - | - | - |
| 9. பிழைகளும் தவிர்ப்புக்களும் ... | -34 | -14 | +28 | +59 | +43 | -1,295 | -1,812 | +2,729 | +3,399 | +3,236 |
| 10. மொத்த நிலுவை ... | -67 | +138 | +152 | +133 | +375 | -1,905 | +7,480 | +10,140 | +9,469 | +24,130 |
| 11. நாணய அசைவுகள் (- மிகை) ... | +67 | -138 | -152 | -133 | -375 | +1,905 | -7,480 | -10,140 | -9,469 | -24,130 |
| செலாவணி வீதம் ரூ/சிஎஉ ... | | | | | | 46.19 | 54.42 | 56.61 | 61.75 | 67.39 |
| மொ. உ. உ. இன் விகிதமாக சதவீதங்களில் | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | | | | | | | | | | |
| நடைமுறைக் கணக்கு | | | | | | -9.55 | -8.75 | -11.07 | -10.82 | -11.18 |
| நடைமுறைக் கணக்கு, கொடைகள் | | | | | | -4.39 | -3.23 | -5.37 | -4.47 | -3.75 |
| நீங்கலாக | | | | | | -7.07 | -5.45 | -7.62 | -6.37 | -5.31 |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானவை

(இ) முன்னைய ஆண்டுகளில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்த இரு வானூர்திகளின் இறக்குமதியின் பேரிலான மூலதன உட்பாய்ச்சல்களுக்கான சீராக்கங்களையும் உள்ளடக்கும்

குறிப்பு : நாணயத்துறையிலுள்ள எல்லா கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டிறுதியின் செலாவணி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இப்பின்னணியில் இலங்கையின் வெளிநாட்டுத்துறை இவ்வாண்டில் வரேவற்கத்தக்க செயலாற்றத்தைக் காட்டியது. தொகுத்து நோக்குகையில் செழிப்பான ஏற்றுமதித்துறை, பணிகள்துறையில் குறிப்பிடத்தக்க சாதகமான மாற்றம், தனியார் மாற்றல்களில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட அதிகரித்துச்செல்லும் போக்கு, தனியார் வெளிநாட்டு மூலதனத்தின் விரைவுபடுத்தப்பட்ட உட்பாய்ச்சல்கள் ஆகியன சென்மதி நிலுவையில் என்றுமில்லாத மொத்த மிகையொன்றை ஏற்படுத்துவதற்கும், நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் இறக்குமதி இயலளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கும் வழிவகுத்தன. உண்மையில் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட இம்முன்னேற்றங்கள் நாணயத்துறையின் உறுதிப்பாட்டைக்குலைக்கும் முக்கிய காரணியாக மாற்றமடைந்துள்ளமையினால் பணநிரம்பல் மீதான அதன் விரிவுத்தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு மிகவும் கடுமையான நாணயக் கொள்கையினைப் பின்பற்ற வேண்டிய நிலையில் மத்திய வங்கியுள்ளது.

## சென்மதி நிலுவை வெளிப்பாடு

### வணிகக்கணக்கு

வெளிநாட்டு வர்த்தகத்துறையின் செயலாற்றம் 1993 இல் கலப்புடையதாயிருந்தது. ஏற்றுமதியின் வளர்ச்சிவேகம் தொடர்ந்தும் காணப்பட்டு 1992 இன் சிஎஉ 17,450 இலட்சத்திலிருந்து (ரூ. 1,078,550 இலட்சம்) 1993 இல் சிஎஉ 20,460 இலட்சமாக (ரூ. 1,381,740 இலட்சம்) 17 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. முன்னைய ஆண்டிலும் ஒப்பிடத்தக்க இவ்வதிகரிப்பு 17 சதவீதமாக இருந்தது. வரட்சியினால் பாதிக்கப்பட்ட முன்னைய ஆண்டிலிருந்து வேளாண்மை உற்பத்தி ஏற்றுமதிகளில் காணப்பட்ட 9 சதவீதமான மீட்சியும், கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிகளில் காணப்பட்ட 20 சதவீதமான அதிகரிப்புமே 1993 இல் நாட்டின் ஏற்றுமதிச் செயலாற்றத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க பண்புகளாகும். அதே வேளையில் இறக்குதி மீதான செலவு ஏறத்தாழ 16 சதவீதத்தினால் அதிகரித்து சிஎஉ 28,710 இலட்சமாக (ரூ. 1,936,600 இலட்சம்) விளங்கியது. ஏயர்லங்கா அதன் வானூர்தித் தொகுதியை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக இறக்குமதி செய்த ஐ. அ. டொலர்கள் 870 இலட்சம் பெறுமதியுடைய இரண்டு வானூர்திகளின் இறக்குமதியும், அதேபோன்று புகைவண்டி, பேருந்து ஆகிய இரண்டு அரச போக்குவரத்துக்களையும் சீர்படுத்துவதற்கான மூலதனக் கருவி இறக்குமதிகளுமே இவ்வதிகரிப்புக்கான முக்கிய உதவுக்காரணிகளாக விளங்கின. இதே வேளையில் செலாவணிக்கட்டுப்பாடுகளை நீக்கியமையும் உயர்தீர்வைகள், வரிகள், உரிமங்கள் போன்ற வடிவில் காணப்பட்ட இறக்குமதியை ஊக்கமிழக்கச் செய்த முறைகளை இலகுபடுத்தியமையும் வளர்ச்சியடைந்து செல்லும் தயாரிக்கப்பட்ட ஏற்றுமதித்துறையின் விரிவடைந்துசெல்லும் தேவைகளும் இடைநிலைப் பொருட்களினதும் பொறி, கருவி வடிவிலமைந்த முதலீட்டுப் பொருட்களினதும் இறக்குமதியில் இவ்வாண்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களுக்கு உதவின. இதன் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறை 1992 இற்கும் 1993 இற்குமிடையில் சிஎஉ 7,400 இலட்சத்திலிருந்து (ரூ. 457,850 இலட்சம்) சிஎஉ 8,250 இலட்சத்திற்கு (ரூ. 554,860 இலட்சம்) மோசமடைந்தது. எனினும் விரிவுபடுத்தப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குக் காரணமாயிருந்திருக்கக்கூடிய இடைநிலை, முதலீட்டுப் பொருட்களில் காணப்பட்ட

அட்டவணை 1.50

## பணிகளும் மாற்றல்களும் 1989 - 1993

| விடயம் | சிஎஉ ப. இ | | | | | ரூ. ப. இ. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1989 | 1990 | 1991 | 1992 (அ) | 1993 (ஆ) | 1989 | 1990 | 1991 | 1992 (அ) | 1993 (ஆ) |
| 1. துறைமுக போக்குவரத்து, | | | | | | | | | | |
| காப்புறுதி ... | -8 | 10 | 28 | 32 | 73 | -322 | 522 | 1,588 | 1,925 | 4,944 |
| வரவுகள் ... | 102 | 125 | 150 | 157 | 171 | 4,710 | 6,815 | 8,497 | 9,696 | 11,509 |
| கொடுப்பனவுகள் ... | 109 | 115 | 122 | 125 | 98 | 5,032 | 6,293 | 6,909 | 7,731 | 6,565 |
| 2. பயணம் ... | 6 | 40 | 45 | 60 | 60 | 278 | 2,190 | 2,545 | 3,711 | 3,984 |
| வரவுகள் ... | 59 | 94 | 116 | 39 | 146 | 2,759 | 5,143 | 6,571 | 8,573 | 9,815 |
| கொடுப்பனவுகள் ... | 54 | 54 | 71 | 79 | 86 | 2,481 | 2,953 | 4,026 | 4,862 | 5,831 |
| 3. முதலீட்டு வருவாய் ... | -124 | -123 | -130 | -27 | -85 | -5,738 | -6,685 | -7,367 | -7,821 | -5,757 |
| வரவுகள் ... | 46 | 68 | 40 | 48 | 79 | 2,106 | 3,728 | 2,259 | 2,997 | 5,366 |
| கொடுப்பனவுகள் ... | 170 | 191 | 170 | 175 | 164 | 7,844 | 10,413 | 9,626 | 10,818 | 11,123 |
| 3.1 இலாபங்களும் | -13 | -19 | -12 | 22 | -19 | -608 | -1,006 | -718 | -1,391 | -1,316 |
| பங்கிலாபங்களும் ... | 0 | 0 | 2 | 1 | 4 | 18 | 11 | 89 | 84 | 279 |
| வரவுகள் ... | 13 | 19 | 14 | 24 | 23 | 626 | 1,017 | 807 | 1,476 | 1,595 |
| 3.2 வட்டி ... | -110 | -104 | -117 | -104 | -66 | -5,130 | -5,679 | -6,649 | -6,430 | -4,441 |
| வரவுகள் ... | 46 | 68 | 38 | 47 | 785 | 2,088 | 3,717 | 2,170 | 2,913 | 5,087 |
| கொடுப்பனவுகள் ... | 156 | 172 | 155 | 151 | 141 | 7,218 | 9,396 | 8,819 | 9,342 | 9,528 |
| 4. அரச பணிகள் ... | 2 | -3 | -3 | -3 | -11 | 77 | -195 | -170 | -176 | -714 |
| வரவுகள் ... | 17 | 11 | 17 | 13 | 11 | 785 | 586 | 953 | 825 | 736 |
| கொடுப்பனவுகள் ... | 15 | 14 | 20 | 16 | 22 | 708 | 781 | 1,123 | 1,001 | 1,450 |
| 5, ஏனைய பணிகள் ... | 1 | 5 | -5 | 15 | -6 | 96 | 263 | -369 | 891 | -415 |
| வரவுகள் ... | 91 | 93 | 117 | 132 | 127 | 4,237 | 5,092 | 6,616 | 8,165 | 8,623 |
| கொடுப்பனவுகள் ... | 90 | 88 | 122 | 117 | 134 | 4,141 | 4,829 | 6,985 | 7,273 | 9,038 |
| 6. மொத்தப் பணிகள் ... | -123 | -72 | -65 | -23 | 31 | -5,609 | -3,905 | -3,773 | -1,430 | 2,043 |
| வரவுகள் ... | 314 | 391 | 440 | 489 | 535 | 14,598 | 21,364 | 24,897 | 30,256 | 36,050 |
| கொடுப்பனவுகள் ... | 437 | 463 | 505 | 512 | 504 | 20,207 | 25,269 | 28,670 | 31,686 | 34,007 |
| 7. தனியார் மாற்றல்கள் ... | 258 | 268 | 293 | 328 | 402 | 11,840 | 14,518 | 16,623 | 20,253 | 27,090 |
| வரவுகள் ... | 279 | 296 | 323 | 389 | 454 | 12,830 | 16,054 | 18,311 | 24,037 | 30,591 |
| கொடுப்பனவுகள் ... | 21 | 28 | 30 | 61 | 52 | 990 | 1,536 | 1,688 | 3,784 | 3,501 |
| 8. அலுவல்சார் மாற்றல்கள் | 147 | 130 | 148 | 130 | 115 | 6,751 | 7,142 | 8,407 | 8,027 | 7,749 |
| வரவுகள் ... | 147 | 130 | 148 | 130 | 115 | 6,751 | 7,142 | 8,407 | 8,027 | 7,749 |
| கொடுப்பனவுகள் ... | – | – | – | – | – | – | – | – | – | – |
| 9. மொத்த மாற்றல்கள் ... | 405 | 398 | 441 | 457 | 517 | 18,591 | 21,660 | 25,030 | 28,280 | 34,839 |
| வரவுகள் ... | 426 | 426 | 471 | 518 | 569 | 19,581 | 23,196 | 26,718 | 32,064 | 38,340 |
| கொடுப்பனவுகள் ... | 21 | 28 | 30 | 61 | 52 | 990 | 1,536 | 1,688 | 3,784 | 3,501 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.

(ஆ) தற்காலிகமானவை - 1993 ஆம் ஆண்டின் பின்னர் தரவுச் சேகரிப்பு முறை திருத்தப்பட்டுள்ளமையால் பணிகள் துறையின் குறிப்பாக வகைகள் 1, 4 மற்றும் 5 இன் பகுப்பாய்வுகள் முன்னைய ஆண்டுகளுடன் நேரடியாக ஒப்பிடத்தக்கனவல்ல.

முறையே 15 சதவீத, 24 சதவீத அதிகரிப்புடனொப்பிடுகையில் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் மீது ஏற்பட்ட 6 சதவீதம் மட்டும் கொண்ட மிதமான அதிகரிப்பைக் கவனத்திற்கெடுக்கையில் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட விரிவாக்கம் கடுமையாகச் சிந்திக்கப்பட வேண்டிய ஒரு விடயமல்ல. உண்மையில் வானூர்திகள்; மற்றும் பேருந்துகள், புகையிரத வண்டிகளுக்கான உதிரிப்பாகங்கள் போன்ற விதிவிலக்கான விடயங்கள் தவிர்க்கப்பட்டால் பற்றாக்குறை சிஎஉ 7,050 இலட்சமாக வீழ்ச்சியடைந்து, மொ.உ.உ. இன் விகிதமாக 1992 இன் 10.6 சதவீதத்திலிருந்து 1993 இல் 9.6 சதவீதத்திற்கு ஒரு குறைப்பினைப் பிரதிபலித்திருக்கலாம்.

## பணிகள் கணக்கு

1993 இல் சென்மதி நிலுவையில் குறிப்பிடத்தக்க சாதகமான முன்னேற்றமாகக் காணப்படுவது யாதெனில் 1982 இலிருந்து தொடர்ச்சியாகப் பணிகள் கணக்கில் இருந்து வந்த பற்றாக்குறை எதிர்மாறாக மாற்றமடைந்து 1992 இன் சிஎஉ 230 இலட்சம் கொண்ட குறைக்கெதிராக (ரூ. 14,300 இலட்சம்) 1993 இல் சிஎஉ 310 இலட்சம் (ரூ. 20,430 இலட்சம்) கொண்ட என்றுமில்லாத மிகையைப் பதிவு செய்தமையாகும். துறைமுக வருவாய்களின் பேரிலான அதிகரித்த தேறிய உட்பாய்ச்சல்களும் நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சியினால் முதலீட்டு வருமானத்தில் காணப்பட்ட அதிகரிப்புமே பணிகள் கணக்கில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு உதவிய முக்கிய காரணிகளாகும்*. இதேவேளையில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் எண்ணிக்கையில் சிறிதளவிலான வீழ்ச்சி காணப்பட்டபோதிலும் பயணவகையின் செயலாற்றம் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருந்தது. சராசரியாகத் தங்கும் காலப்பகுதியிலும் சுற்றுலாப்பயணி ஒருவருக்கான சராசரிச் செலவிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் இவ்வீழ்ச்சியினை மிதப்படுத்தியதுடன் இவ்வகையின் வருவாய்கள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 1,390 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,460 இலட்சத்திற்கு 5 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்தன. அதேவேளையில் பயண வகையிலும் “ஏனைய” பணிகள் வகையின் வெளிப்பாய்ச்சல்களில் காணப்பட்ட அதிகரிப்பு இப்பணிக் கொடுப்பனவு வகைகளின் பேரிலான செலாவணிக்கட்டுப்பாட்டுத் தடைகள் இவ்வாண்டில் முற்றாக நீக்கப்பட்டமையைப் பிரதிபலித்தன.

முதலீட்டு வருமான உட்பாய்ச்சல்கள் 1992 இற்கும் 1993 இற்குமிடையில் சிஎஉ 480 இலட்சத்திலிருந்து சிஎஉ 790 இலட்சத்திற்கு 64 சதவீதத்திற்கு மேலாக அதிகரித்தன. இவ்வதிகரிப்பின் பெரும்பகுதி இரு ஆண்டுகளுக்குமிடையில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் சிஎஉ 6,580 இலட்சத்திலிருந்து சிஎஉ 11,450 இலட்சமாக அதிகரித்த மத்திய வங்கியின் முதலீட்டு வருமானத்தின் பேரில் ஏற்பட்டதாகும். இதேவேளையில் வெளிநாட்டு நேரடி முதலீடு அதிகரித்தபோதிலும், இலாப, பங்கிலாப மீள அனுப்பல்கள் ஏறக்குறைய முன்னைய ஆண்டின் மட்டத்திலேயே இருந்தன. இது முதலீடுகளுக்குக் கிடைத்த உயர்ந்த வீத வருவாய் மற்றும் நாட்டின் தொடர்ச்சியான தாராளமயமாக்கல் ஊக்குவிப்புக்கள் என்பன காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அத்தகைய வருவாய்களைத் தாயகத்திற்குத் திருப்பி அனுப்புவதைவிட இலங்கையிலேயே மீள முதலீடு செய்வதன் வடிவில்

---

* அட்டவணை 1.50 இன் கீழுள்ள அடிக்குறிப்பு “ஆ” வினைப் பார்க்கவும்.

காணப்பட்ட இசைவெனலாம். வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 100 இலட்சத்தினால் சிஎஉ 1,410 இலட்சத்துக்கு வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக முதலீட்டு வருவாய்களின் பேரிலான தேறிய வெளிப்பாய்ச்சல்கள், முன்னைய ஆண்டின் சிஎஉ 1,270 இலட்சத்துடனொப்பிடுகையில், சிஎஉ 850 இலட்சமாயிருந்தன. முன்னைய மூன்று ஆண்டுகளிலும் பற்றாக்குறைகள் படிப்படியாக குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட மிகை பணிகள் கணக்கு பொதுவாக வலுவடைந்துள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது. இது பணிக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகளை நீக்குவது சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கில் கட்டாயமான ஒரு மோசமான நிலைக்கு வழிவகுக்குமென்பதல்ல என்ற கருத்துடன் ஒத்துப்போவதாகவுள்ளது.

### மாற்றல்கள் கணக்கு

மாற்றல்கள் கணக்கு குறிப்பாக தனியார் மாற்றல்களைப் பொறுத்தவரையில் தொடர்ந்தும் அதிகரித்த தேறிய உட்பாய்ச்சல்களைப் பதிவு செய்தது. தனியார் மாற்றல்களின் மொத்த வரவுகள் 1992 இன் சிஎஉ 3,890 இலட்சத்திலிருந்து (ரூ. 240,370 இலட்சம்) 1993 இல் சிஎஉ 4,540 இலட்சத்திற்கு (ரூ. 305,910 இலட்சம்) 17 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பின் பெரும்பகுதிக்குத் தொடர்ச்சியாக இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் குறிப்பாக மத்திய கிழக்குக்குச் சென்றவர்களின் வெளிப்பாய்ச்சலே பொறுப்பாக இருந்தவேளையில் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் கவர்ச்சிகரமான உள்நாட்டு வட்டி வீதங்களினாலும் இலங்கையின் நிதி நிலைமையின் உறுதிப்பாட்டில் கொண்ட அதிகரித்த நம்பிக்கையினாலும் கவரப்பட்டமையை இது பிரதிபலித்தது. அதேவேளையில் தனியார் மாற்றல்களின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் 1993 இல் சிஎஉ 520 இலட்சமாக விளங்கி 1992 இல் பதிவுசெய்யப்பட்ட சிஎஉ 610 இலட்சங்கொண்ட வெளிப்பாய்ச்ல்களைவிட ஓரளவு குறைவாயிருந்தது. இது அவ்வாண்டில் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோரின் தடுத்துவைக்கப்பட்ட சொத்துக்களினை விடுவிப்பதற்கான இரு தீர்மானங்களின் விளைவாக ஏற்பட்டது. இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் பண்ட மற்றும் செயற்றிட்டக்கொடைகள் வடிவில் அமைந்த அலுவல்சார் மாற்றல்கள் சிஎஉ 1,300 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,150 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சி காணப்பட்டபோதிலும், மாற்றல்கள் கணக்கின் தேறிய உட்பாய்ச்சல்கள் 1992 இற்கும் 1993 இற்கும் இடையில் சிஎஉ 4,570 இலட்சத்திலிருந்து (ரூ. 282,800 இலட்சம்) சிஎஉ 5,170 இலட்சத்திற்கு (ரூ. 348,390 இலட்சம்) அதிகரித்துக் காணப்பட்டது.

### நடைமுறைக் கணக்கு

வர்த்தகக் கணக்கில் பற்றாக்குறை விரிவடைந்தபோதும் பணிகள் கணக்கிலும் மாற்றல் கணக்கிலும் காணப்பட்ட திருந்திய செயலாற்றம் நடைமுறைக் கணக்குக்குறையினை 1992 இன் சிஎஉ 3,060 இலட்சத்திலிருந்து 1993 இல் சிஎஉ 2,770 இலட்சங்களுக்குச் சிறிதளவால் குறைவடையைச் செய்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக பற்றாக்குறை இவ்விரு காலப்பகுதிக்குமிடையில் 4.5 சதவீதத்திலிருந்து 3.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கொடைகள் தவிர்ந்த இவ் விகிதமும் 6.4 சதவீதத்திலிருந்து 5.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையில் இரண்டாவது ஆண்டாகத் தொடர்ந்தும்

காணப்பட்ட இவ்வீழ்ச்சி சிறிதாக இருந்தபோதிலும் வெளிநாட்டு அரங்கில் வரவேற்கத்தக்கதொரு அபிவிருத்தியாகவிருந்தது.

**மூலதனக்கணக்கு**

1993 இல் மூலதனக் கணக்கு தனியார்துறைக்கான தேறிய உட்பாய்ச்சலில் எழுச்சியொன்றைக் கொண்டிருந்தது. நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சல்கள் 1992 இன் சிஎஉ 3,810 இலட்சத்திலிருந்து (ரூ. 234,500 இலட்சம்) 1993 இல் சிஎஉ 6,090 இலட்சத்திற்கு (ரூ. 409,170 இலட்சம்) 60 சதவீதங்கொண்ட கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தன. இவ்வதிகரிப்புக்குப் பல்வேறு வகைகளிலேற்பட்ட தனியார் வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சல்களே முழுமையான காரணமாகும்.

வர்த்தகத் தொழிற்பாட்டிலீடுபட்டிருந்த புதிய தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை 1992 இன் 58 இலிருந்து 1993 இல் 94 இற்கு அதிகரித்தமையின் மூலம் எடுத்துக்காட்டப்படுவதுபோல் 1993 இல் முதலீட்டுச் சபையின்கீழ் உள்ள (முச) தொழில் முயற்சிகளில் குறிப்பிடத்தக்கதொரு விரிவு காணப்பட்டதுடன் 1993 இறுதியில் அத்தகைய தொழில் முயற்சிகளின் மொத்த எண்ணிக்கை 305 ஆகியது. இவ்வளர்ச்சிக்கூடாக முதலீட்டுச்சபையின் கீழ்வரும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் இவ்வாண்டில் தனியார்மயமாக்கப்பட்ட அரச தொழில் முயற்சிகளின் முதலீடுகளும் 1993 இல் சிஎஉ 1,340 இலட்சமாக விளங்கின. முன்னைய ஆண்டின் சிஎஉ 860 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் இது 56 சதவீதமானதொரு அதிகரிப்பாகும். இதே வேளையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் காணப்பட்ட எருதுப்போக்கு ஆண்டு முழுவதிலும் உறுதியாகக் காணப்பட்டதுடன், பட்டியலிடப்பட்ட முதலீடுகளின் பேரிலான உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டின் சிஎஉ 180 இலட்சத்திலிருந்து 1993 இல் சிஎஉ 480 இலட்சத்திற்கு அதிரித்தமையைக் காட்டியது. இதேவேளையில் தனியார் நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்களும் கணிசமானளவில் அதிகரித்தன. மூன்று பெரும் உள்நாட்டு நிதி நிறுவனங்களூடாக எயர்லங்காவின் வானூர்தி விரிவாக்க நிகழ்ச்சித் திட்டத்துக்கும் அரசின் ஆதரவிலான பேருந்து உதிரிப்பாகங்களைப் பொருத்தும் செயற்றிட்டத்திற்கும் வெளிநாட்டு நிதியினை வழங்குதலையும் அத்துடன், அபிவிருத்தி நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்டதும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிலேற்பட்ட அதிகரிப்புடன் இணைந்திருந்த முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்டதுமான வெளிநாட்டுக் கடன் மூலதனத்தையும் முக்கிய உட்பாய்ச்சல்கள் உள்ளடக்கியிருந்தன. முக்கிய வெளிப்பாய்ச்சல் வானூர்திகளின் கொள்வனவிற்காக ஏயர்லங்காவினால் மேற்கொள்ளப்பட்ட மேலதிகக் கொடுப்பனவுகள் மற்றும் முதலீட்டுச் சபையின் கீழான தொழில் முயற்சிகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட கடன்களின் மீளக் கொடுப்பனவுகள் என்பனவற்றின் பேரில் காணப்பட்டன. இத்தகைய நீண்டகால மூலதனப் பாய்ச்சல்களின் இறுதியான விளைவாக முன்னைய ஆண்டில் ஏற்பட்ட சிஎஉ 180 இலட்சம் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் சிஎஉ 1,320 இலட்சம் கொண்ட தேறிய உட்பாய்ச்சல் காணப்பட்டது.

தனியார் குறுங்கால மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல் 1992 இன் சிஎஉ 910 இலட்சத்திலிருந்து 1993 இல் சிஎஉ 1,050 இலட்சத்திற்கு அதிகரித்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது குறுங்காலப் படுகடனின்

வெளிநின்ற தொகையினைக் குறிப்பிடத்தக்களவில் குறைத்தது. மேலும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் கூறுகளினால் (வெநாவகூ) முதலீட்டுச்சபையின் கீழ் இல்லாத ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் வசதிகள் ஆண்டுத் தொடக்கத்தில் உள்நாட்டு வங்கித்தொழில் கூறுகளுக்கு மாற்றப்பட்டமை இப்பிரிவில் ஏற்றுமதியாளர்களினால் வெளிநாட்டு வங்கித் தொழில் கூறுகளுக்குச் செய்யப்பட்ட குறுங்காலக் கொடுகடனில் தேறிய மீளக்கொடுப்பனவொன்றை விளைவித்தது. அதேவேளையில் முதலீட்டுச்சபையின் கீழான தயாரிப்புத் தொழில் விரிவடைந்தமையால் இந்நிறுவனங்களுக்கு இவற்றின் மூலப்பொருட்களின் இறக்குமதிகளை நிதியிடுவதற்காக வழங்கப்பட்ட குறுங்காலக் கொடுகடன்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. இவ்வாறு முதலீட்டுச்சபையின் கீழ் அல்லாத நிறுவனங்களினால் தேறிய மீளக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டபோதும் தனியார் குறுங்கால மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல் சிஎஉ 1,050 இலட்சமாகக் காணப்பட்டது.

தனியார் மூலதன உட்பாய்ச்சல்களில் காணப்பட்ட எழுச்சிக்கு பெருமளவில் முரண்படும் வகையில், அரசுக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் சிஎஉ 1,900 இலட்சமாக விளங்கி ஏறக்குறைய முன்னைய ஆண்டின் இதே மட்டத்திலேயே காணப்பட்டது. சலுகை அடிப்படையிலான கடன்களின் பேரிலான பகிர்ந்தளிப்புக்கள் ஓரளவு அதிகரித்து மொத்தப்பகிர்வுகளில் சிஎஉ 210 இலட்சங்கொண்ட அதிகரிப்புக்கு வழிவகுத்தன. எனினும் முன்னைய ஆண்டினைவிட கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் காணப்பட்ட இது தொடர்பான அதிகரிப்பினால் தேறிய உட்பாய்ச்சல் இதே மட்டத்திலேயே காணப்பட்டது. அரசுக்கான சலுகை உதவியினைத் தொடர்ந்தும் வழங்கும் முக்கிய மூலங்களாக ஆசிய அபிவிருத்தி வங்கி (ஆஅவ) (சிஎஉ 880 இலட்சம்), பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு (பஅஅ) (சிஎஉ 870 இலட்சம்), யப்பான் (சிஎஉ 660 இலட்சம்) என்பன விளங்கின.

## வெளிநாட்டுச் சொத்துக்கள்

1993 இல் வெளிநாட்டு அரங்கில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க பண்பு ஆண்டு முழுவதிலும் தனியார் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல் உறுதியாகக் காணப்பட்டமையேயாகும். இச்சூழ்நிலையில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1992 இறுதியின் சிஎஉ 10,470 இலட்சத்திலிருந்து 1993 இறுதியில் சிஎஉ 15,430 இலட்சமாக அமைந்து 47 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இதுவரையில் ஆராயப்பட்ட சென்மதி நிலுவை விடயங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களுடன் பன்னாட்டு நாணய நிதியுடனான கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான சிஎஉ 380 இலட்சங் கொண்ட தேறிய உட்பாய்ச்சல் இவ்வொதுக்குகளின் அதிகரிப்பிற்குப் பங்களித்தது. வெளிநாட்டுச் சொத்துக்களில் காணப்பட்ட பொதுவான வளர்ச்சி 74 சதவீதத்தால் சிஎஉ 11,450 இலட்சத்திற்கு அதிகரித்த மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சியில் பிரதிபலித்தது. அதேவேளையில் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களும் 3 சதவீதத்தால் சிஎஉ 3,750 இலட்சத்திற்கு விரிவடைந்திருக்கையில் அரசின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1992 இறுதிக்கும் 1993 இறுதிக்கும் இடையில் சிஎஉ 230 இலட்சமாக அதே மட்டத்திலேயே இருந்தன. மத்திய வங்கிவசமும் அரசிடமுமிருந்த வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்

அட்டவணை 1.51

## இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1989 – 1993

| உடைமையாளர் (கால முடிவில்) | சி. எ. உ. பத்து இலட்சத்தில் (அ) | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 |
| 1. அரசு (ஆ) ... | 32.3 | 19.3 | 26.7 | 23.4 | 23.4 | 1,696.1 | 1,104.5 | 1,631.6 | 1,482.1 | 1,597.2 |
| 2. அரசு முகவரகங்கள் ... | - | - | - | - | - | 1.0 | 1.1 | 1.1 | 1.0 | 1.1 |
| 3. மத்திய வங்கி ... | 191.3 | 286.3 | 475.9 | 657.9 | 1,144.9 | 9,962.5 | 16,399.2 | 28,956.9 | 41,591.7 | 78,073.6 |
| 4. வர்த்தக வங்கிகள் ... | 223.2 | 296.4 | 306.2 | 365.7 | 374.9 | 11,729.9 | 16,966.8 | 18,633.4 | 23,160.7 | 25,567.2 |
| 5. மொத்தம் ... | 446.8 | 602.0 | 808.8 | 1,047.0 | 1,543.2 | 23,389.5 | 34,471.6 | 49,233.0 | 66,235.5 | 105,239.1 |
| 6. மாதங்களின்படி மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ... | | | | | | | | | | |
| 6.1 வணிக வர்த்தக இறக்குமதிகள் ... | 3.1 | 3.7 | 4.4 | 5.1 | 6.5 | | | | | |
| 6.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி ... | 5.2 | 3.0 | 3.6 | 4.2 | 5.5 | | | | | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணயநிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு முடிவு வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

| ஆண்டு | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|---|
| சிஎஉ ஒன்றுக்கு ரூபா | 52.57 | 57.25 | 60.85 | 63.33 | 68.19 |

(ஆ) திறைசேரி துணைச் செயலாளரின் சிறப்புச் சுழல்வுக் கொடுகடன் நிலுவைகளை உள்ளடக்குவதற்காக 1985 இலிருந்தான எண்தொகைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

# வெளிநாட்டுச் சொத்துக்கள்

காலாண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி

இவ்விரண்டு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 6,810 இலட்சத்திலிருந்து சிஎஉ 11,680 இலட்சத்திற்கு அதிகரித்தன. 1993 இன் இறுதியிலிருந்த மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1994 இற்காகத் திட்டமிடப்பட்ட 5.6 மாத இறக்குமதிகளை நிதியிடப் போதியதாக இருந்தவேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 4.2 மாத இறக்குமதிகளை நிதியிடப் போதியதாயிருந்தன.

## செலாவணி வீத அசைவுகள்

1993 இல் எல்லா முக்கிய பன்னாட்டு நாணயங்களுக்குமெதிராக இலங்கை ரூபாவின் அசைவுகள் ஓரளவுக்கு கலப்புடையதாக இருந்தன. இது பன்னாட்டு வெளிநாட்டுச் செலாவணியினதும் நிதிச் சந்தைகளினதும் நிலையற்ற தன்மை காரணமாக இவ்வாண்டில் முக்கிய நாணயங்களின் குறுக்கு வீதங்களில் ஏற்பட்ட தளம்பல்களை முக்கியமாகப் பிரதிபலித்தது. இச்சூழ்நிலையில் இலங்கை ரூபா இடையீட்டு நாணயமான ஐ. அ. டொலருக்கெதிராக தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த வேளையில், யப்பானிய யென், ஸ்ரேலிங் பவுண், டியூச்மார்க், பிரான்சிய பிராங் ஆகியவற்றுக்கெதிரான அசைவுகள் இவ்வாண்டில் இந் நாணயங்களுக்கெதிராக ஐ. அ. டொலர்கள் தளம்பலுற்றமையைப் பிரதிபலித்தன. இம் மாற்றங்களின் பொதுவான தாக்கமாக 1992 இறுதியிலிருந்து 1993 இறுதிவரை இலங்கை ரூபா யப்பானிய யென்னுக்கெதிராக 16.6 சதவீதத்தாலும் ஐ. அ. டொலருக்கெதிராக 7.2 சதவீதத்தாலும் ஸ்ரேலிங்பவுணுக்கெதிராக 5.5 சதவீதத்தாலும் பிரான்சிய பிராங்கிற்கெதிராக 0.9 சதவீதத்தாலும் டியுச் மாக்கிற்கெதிராக 0.6 சதவீத்தினாலும் பெறுமதியில் தேய்வடைந்தது. இதன்விளைவாக இலங்கை ரூபா சிஎஉஇற்கெதிராக இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 7.1 சதவீதத்தால் தேய்வடைந்தது. அதே வேளையில் மீளாய்வின் கீழான காலப்பகுதியில் இலங்கை ரூபா இந்திய ரூபாவுக் கெதிராக 11.1 சதவீதத்தால் பெறுமதியில் உயர்வடைந்தது. 1993 மாச்சில் இந்திய நாணயத்தில் மேற்கொள்ளப்பட்ட பெருமளவிலான பெறுமதிக்குறைப்பே இதற்கான முக்கிய காரணமாகும்.

இச்செலாவணி வீத அசைவுகளின் இணைந்த விளைவாக முக்கிய வர்த்தகப் பங்காளர் தொடர்பான வர்த்தக நிறையேற்றப்பட்ட செலாவணி வீதமென வரைவிலக்கணம் செய்யப்பட்ட இலங்கையின் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (பெதாசெவீ) 1992 திசெம்பரிலிருந்து 1993 திசெம்பர்வரை புள்ளிக்குப்புள்ளி என்ற அடிப்படையில் ரூபாவில் 7.2 சதவீத பெயரளவிலான தேய்வொன்றைக் கொண்டிருந்தது. இலங்கைக்கும் அதன் முக்கிய வர்த்தகப் பங்காளர்களுக்குமிடையிலான பணவீக்க வேறுபாடுகளுக்காகச் சீராக்கஞ்செய்யப்பட்ட பெயரளவிலான செலாவணி வீதமான உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் (உதாசெவீ) இவ்வாண்டில் ரூபாவின் பெறுமதியில் 0.3 சதவீதங்கொண்ட உண்மையான உயர்ச்சியைப் பிரதிபலித்தது. அதே வேளையில் ரூபாவின் பெயரளவு மற்றும் உண்மைத் தேய்வுகளின் ஆண்டுச் சராசரி முறையே 5.4 சதவீதமாகவும் 1.4 சதவீதமாகவும் இருந்தன.

அட்டவணை 1.52

## செலாவணி வீத அசைவுகள் 1989 – 1993

| நாணயம் | | அலகு ஒன்றிற்கு ஆண்டு இறுதி வீதங்கள் ரூபாய்களில் | | | | | முன்னைய ஆண்டினைவிட சதவீதமாற்றம் (அ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 |
| 1. | டியுச் மார்க் ... | 23.7002 | 26.1554 | 28.0178 | 28.5714 | 28.7371 | -22.03 | -9.39 | -6.65 | -1.94 | -0.58 |
| 2. | பிரான்சிய பிராங்கு ... | 6.9354 | 7.7125 | 8.1924 | 8.3857 | 8.4655 | -21.96 | -10.08 | -5.86 | -2.31 | -0.94 |
| 3. | இந்திய ரூபாய் ... | 2.3603 | 2.2332 | 1.6352 | 1.7520 | 1.5774 | -7.44 | 5.69 | 36.57 | -6.67 | 11.07 |
| 4. | யப்பானிய யென் ... | 0.2816 | 0.2943 | 0.3390 | 0.3699 | 0.4433 | -6.58 | -4.32 | -13.19 | -8.35 | -16.56 |
| 5. | ஸ்டேர்லிங் பவுண் ... | 65.0400 | 75.5908 | 79.5820 | 69.4278 | 73.4972 | -9.17 | -13.96 | -5.02 | 14.63 | -5.54 |
| 6. | ஐ. அ. டொலர் ... | 40.0000 | 40.2400 | 42.5800 | 46.0000 | 49.5615 | -17.42 | -0.60 | -5.50 | -7.43 | -7.19 |
| 7. | சிஎஉ ... | 52.9300 | 57.2479 | 60.8464 | 63.3337 | 68.1932 | -16.34 | -7.54 | -5.91 | -3.93 | -7.13 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) இலங்கை ரூபாவுக்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு: சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

## தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்*

காலாண்டுச் சராசரிகள்

1985 = 100




இலங்கை மத்திய வங்கி

* வீழ்ச்சி தேய்வினைக் குறிக்கின்றது.

*அட்டவணை 1.53*

## பகிர்ந்தளிக்கப்பட்டதும் வெளிநின்றதுமான வெளிநாட்டுப் படுகடன் 1989 – 1993

| | சிஎஉ பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1989 | 1990 | 1991 | 1992 (அ) | 1993 (ஆ) | 1989 | 1990 | 1991 | 1992 (அ) | 1993 (ஆ) |
| 1. நடுத்தர, நீண்டகால படுகடன் ... | 3,636.3 | 3,822.4 | 4,246.0 | 4,624.3 | 5,022.2 | 190,471.7 | 216,846.3 | 255,798.0 | 289,678.6 | 342,516.9 |
| 1.1 அரசு ... | 2,970.3 | 3,184.4 | 3,589.0 | 3,840.8 | 4,080.7 | 157,188.7 | 182,300.3 | 218,400.0 | 243,250.6 | 278,275.0 |
| 1.2 அரச உத்தரவாதத்துடனான அரச கூட்டுத்தாபனங்கள் ... | 154.0 | 136.0 | 141.0 | 175.6 | 250.8 | 8,136.0 | 7,781.0 | 8,578.0 | 11,120.7 | 17,105.1 |
| 1.3 அரச உத்தரவாதத்துடனான தனியார்துறை ... | 108.0 | 108.0 | 120.0 | 129.0 | 144.0 | 6,035.0 | 6,185.0 | 7,319.0 | 8,172.8 | 9,821.6 |
| 1.4 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்கள் ... | 6.0 | 5.0 | 3.0 | 2.4 | 1.4 | 341.0 | 290.0 | 197.0 | 151.0 | 96.4 |
| 1.5 அரச உத்தரவாதமற்ற தனியார்துறை ... | 123.0 | 101.0 | 113.0 | 138.7 | 169.6 | 6,516.0 | 5,802.0 | 6,867.0 | 8,784.4 | 11,565.5 |
| 1.6 ப. நா. நி. எடுப்பனவுகள் ... | 275.0 | 288.0 | 280.0 | 337.8 | 375.7 | 12,255.0 | 14,488.0 | 14,437.0 | 18,199.1 | 25,653.3 |
| 2. குறுங்காலப் படுகடன் ... | 296.8 | 294.0 | 350.0 | 420.6 | 525.7 | 13,210.0 | 16,820.0 | 20,200.0 | 24,578.6 | 31,689.0 |
| 2.1 அரசு ... | - | - | 21.0 | - | - | - | - | 1,275.0 | - | - |
| 2.2 மத்திய வங்கிக் கடன்பாடுகள் ... | 50.4 | - | - | - | - | 2,632.0 | - | - | - | - |
| 2.3 ஏனையவை (இ) ... | 246.4 | 294.0 | 329.0 | 420.6 | 525.7 | 10,578.0 | 16,820.0 | 18,925.0 | 24,578.6 | 31,689.0 |
| 3. மொத்தப் படுகடன் (1 + 2) ... | 3,939.1 | 4,116.4 | 4,596.0 | 5,044.9 | 5,547.9 | 203,681.7 | 233,666.3 | 275,998.0 | 314,257.2 | 374,205.9 |
| ஒப்பந்தக் குறிப்பு வகைகள் | | | | | | | | | | |
| நடுத்தர நீண்டகாலக் கடன்கள் | | | | | | | | | | |
| (1) செயற்றிட்டக் கடன்கள் ... | 2,050.0 | 2,179.0 | 2,393.0 | 2,555.9 | 2,697.5 | 108,521.0 | 124,775.0 | 145,631.0 | 161,873.4 | 183,954.5 |
| (2) செயற்றிட்டமல்லாக் கடன்கள் ... | 926.0 | 1,010.0 | 1,177.0 | 1,251.1 | 1,294.9 | 48,998.0 | 57,832.0 | 71,600.0 | 79,233.7 | 88,303.2 |
| (3) நிரம்பலர் கொடுகடன் ... | 20.0 | 33.0 | 30.0 | 61.2 | 127.8 | 1,046.0 | 1,892.0 | 1,805.0 | 3,873.4 | 8,717.1 |
| (4) ப. நா. நி. பொறுப்பாண்மை நிதியக் கடன்கள் ... | 3.3 | 0.4 | - | - | - | 147.7 | 19.3 | - | - | - |
| (5) ப. நா. நி. – ஏனைய கடன்கள்... | 275.0 | 288.0 | 280.0 | 337.8 | 375.7 | 12,255.0 | 14,488.0 | 14,437.0 | 18,199.1 | 25,653.3 |
| (6) ஏனைய கடன்கள் (ஈ) ... | 362.0 | 312.0 | 366.0 | 418.3 | 526.3 | 19,504.0 | 17,840.0 | 22,325.0 | 26,499.0 | 35,888.8 |

(அ) திருத்தப்பட்டது. (ஆ) தற்காலிகமானவை.

(இ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும்; வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவில் இருந்தான, வர்த்தக கொடுகடன்களையும் குறுங்காலக் கடன்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

(ஈ) அரச கூட்டுத்தாபனங்கள், மற்றும் தனியார் துறையின் நீண்ட காலக் கடன்களையும் உள்ளடக்கும்.

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி.
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்.

## வெளிநாட்டுப் படுகடன்

இலங்கையின் வெளிநாட்டுப்படுகடன் 1993 இறுதியில் சிஉ 55,480 இலட்சமாக மதிப்பிடப்பட்டு 1992 இறுதியிலிருந்து 1993 இறுதிவரையில் சிஉ 5,030 இலட்சங்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தது. வெளிநின்ற படுகடனிலேற்பட்ட இவ்வதிகரிப்பு அரசுக்கும் தனியார்துறைக்குமிடையில் பெரும்பாலும் சமமாகப் பங்கிடப்பட்டது. தனியார்துறையின் படுகடனை அதிகரிக்கச் செய்த கடன் பகிர்வுகள் இக்குறிப்பின் மூலதனக் கணக்குப்பிரிவின் கீழ் விளக்கப்பட்டுள்ளது. அரசின் நடுத்தர, நீண்டகாலப்படுகடன் முக்கியமாக ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, யப்பான் ஆகியவற்றிடமிருந்தான சலுகை உதவி காரணமாக அதிகரித்தது. பன்னாட்டு நாணய நிதியுடனான அதிகரிக்கப்பட்ட அமைப்புச்சீராக்க வசதி ஒழுங்கினது (அஅசீவஒ) இரண்டாம் ஆண்டு திட்டத்தின் கீழான இரண்டாவது தொகுதியின் வழங்கல் சிஉ 560 இலட்சமாக விளங்கியது. இழப்பீட்டு நிதியிடல் வசதியின் கீழ் பன்னாட்டு நிதியத்திலிருந்து முன்பு பெறப்பட்ட கடனின் இறுதிமீளக் கொடுப்பனவாகிய சிஉ 140 இலட்சமும் அமைப்புச்சீராக்க வசதியின் கீழ் 1988 இல் பெறப்பட்டு ப. நா. நிதியத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆரம்ப மீளக் கொடுப்பனவாகிய சிஉ 40 இலட்சமும் சேர்ந்து ப.நா. நிதியத்தின் வெளிநின்ற படுகடனை சிஉ 3,760 இலட்சத்திற்கு சிஉ 380 இலட்சத்தினால் அதிகரிக்கச் செய்தது. வெளிநின்ற குறுங்காலப் படுகடன் சிஉ 5,260 இலட்சமாக அதிகரித்தமைக்கு முதலீட்டுச் சபையின் ஆதரவின் கீழான தொழில் முயற்சிகளுக்கான குறுங்காலக் கொடுகடனின் அளவு அதிகரித்தமையே முழுமையான காரணமாகும்.

## படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

நடுத்தர நீண்டகாலக் கடன்களின் தீர்ப்பனவுகள், எல்லா வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றின் பேரிலான படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1992 இற்கும் 1993 இற்குமிடையில் சிஉ 280 இலட்சத்தால் சிஉ 3,540 இலட்சத்திற்கு வீழ்ச்சிடைந்தன. இவ்வீழ்ச்சி தீர்ப்பனவுக்கொடுப்பனவுகள் வட்டிக்கொடுப்பனவுகள் ஆகிய இரண்டிலும் பிரதிபலிக்கப்பட்டது. ப. நா. நிதியக்கடன்கள் அல்லாதவற்றின் பேரிலான தீர்ப்பனவுக்கொடுப்பனவுகள் சிஉ 180 இலட்சத்தால் அதிகரித்த போதிலும் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான தீர்ப்பனவுக்கொடுப்பனவுகள் 1992 இன் சிஉ 540 இலட்சத்திலிருந்து 1993 இல் சிஉ 180 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. அதே வேளையில் மாச்சு மாதத்திலிருந்து ப. நா. நிதிக்கான வெளிநின்ற எஞ்சிய படுகடன், அமைப்புச்சீராக்க வசதியின் கீழும், அதிகரிக்கப்பட்ட அமைப்புச் சீராக்க வசதியின் கீழுமான உயர்சலுகை உதவியினை முழுதுமாகக் கொண்டிருந்தது. இதன் விளைவாக பன்னாட்டு நாணய நிதியத்துக்கான வட்டிக் கொடுப்பனவுகளும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. வட்டிக்கொடுப்பனவுகளிலும் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சி பொருட்கள், பணிகள் ஆகியவற்றின் ஏற்றுமதிகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இணைந்து படுகடன் பணி விகிதத்தில் 1992 இன் 17.1 சதவீதத்திலிருந்து 1993 இல் 13.7 சதவீதமான குறையொன்று ஏற்பட வழிவகுத்தது. பொருட்களின் ஏற்றுமதிகள், பணிகள், தனியார் மாற்றல்கள் ஆகியனவற்றின் வரவுகளின் விகிதமாகப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளும் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் கிட்டத்தட்ட 3 சதவீதப்புள்ளிகளால் 14.6 சதவீதத்திலிருந்து 11.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

*அட்டவணை 1.54*

## வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1989 – 1993

| விடயம் | சி எ உ பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1989 | 1990 | 1991 | 1992 (அ) | 1993 (ஆ) | 1989 | 1990 | 1991 | 1992 (அ) | 1993 (ஆ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ... | 375.0 | 328.6 | 356.3 | 382.3 | 354.0 | 17,138.0 | 17,972.0 | 20,173.0 | 23,671.0 | 23,945.0 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் ... | 217.6 | 182.0 | 200.5 | 231.0 | 212.6 | 9,920.0 | 9,975.0 | 11,353.0 | 14,328.8 | 14,417.7 |
| (i) ப. நா. நிதியத்திற்கு ... | 46.3 | 31.8 | 63.6 | 54.4 | 18.1 | 2,018.0 | 1,731.0 | 3,600.0 | 3,359.4 | 1,219.7 |
| (ii) ஏனையவற்றிற்கு ... | 171.3 | 150.2 | 136.9 | 176.6 | 194.5 | 7,902.0 | 8,244.0 | 7,753.0 | 10,969.4 | 13,198.0 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் ... | 157.4 | 146.6 | 155.8 | 151.3 | 141.4 | 7,218.0 | 7,997.0 | 8,820.0 | 9,342.2 | 9,528.1 |
| (i) ப. நா. நிதியத்திற்கு ... | 22.7 | 20.6 | 14.7 | 7.8 | 2.1 | 997.0 | 1,121.0 | 830.0 | 480.5 | 141.3 |
| (ii) ஏனையவற்றிற்கு ... | 134.7 | 126.0 | 141.1 | 143.5 | 139.3 | 6,221.0 | 6,876.0 | 7,990.0 | 8,861.7 | 9,389.8 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள் ... | 1,521.5 | 1,847.0 | 1,930.7 | 2,233.7 | 2,581.4 | 70,772.8 | 100,845.5 | 109,275.0 | 138,111.0 | 174,223.8 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள் தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 1,800.5 | 2,143.0 | 2,253.7 | 2,622.6 | 3,035.0 | 83,602.8 | 116,899.5 | 127,586.0 | 162,147.7 | 204,815.3 |
| 4. படுகடன் பணி விகிதங்கள் (இ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2 இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் ... | 24.6 | 17.8 | 18.5 | 17.1 | 13.7 | 24.2 | 17.8 | 18.5 | 17.1 | 13.7 |
| (ii) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த ... | 20.1 | 15.0 | 14.4 | 14.3 | 12.9 | 20.0 | 15.0 | 14.4 | 14.4 | 13.0 |
| 4.2 மேலுள்ள 3 இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் ... | 20.8 | 15.3 | 15.8 | 14.6 | 11.7 | 20.5 | 15.4 | 15.8 | 14.6 | 11.7 |
| (ii) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த ... | 17.0 | 12.9 | 12.3 | 12.2 | 11.0 | 16.9 | 12.9 | 12.3 | 12.2 | 11.0 |
| 5. அரச படுகடன் பணிக்கொடுப்பனவுகள் | | | | | | | | | | |
| 5.1 மேலே உள்ள 1 இன் பங்காக (ஈ) | 196.3 | 168.0 | 178.0 | 206.0 | 221.6 | 9,066.0 | 9,141.0 | 10,075.0 | 12,713.0 | 14,934.0 |
| 5.2 மேலே உள்ள 1 இன் சதவீதமாக | 52.4 | 51.1 | 49.9 | 51.1 | 62.6 | 52.9 | 50.9 | 49.9 | 51.0 | 62.4 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தியமைக்கப்பட்டது. (ஆ) தற்காலிகமானவை.

(இ) ரூபாய் பெறுமதியிலும் சி எ உ. பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.

(ஈ) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல் தவிர்த்து.